இதழ்–72

01.06.2024

தூமி

பல்சுவை மின்னிதழ்

பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
ச. மதுஷா

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

இவ்விதழில் துமித்தவை...

03 ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

06 முழுவதுமாய் உணர முடியாத விந்தை - தந்தை..!

11 பனை பற்றி பலரையும் பேச வைத்திருக்கும் பனைத் திருவிழா

17 பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

19 சிறப்பாக நடைபெற்ற செஞ்சொற்செல்வரின் பிறந்தநாள் நிகழ்வுகள்

22 உயிரிழந்தது கபோசு நாய்

24 கருக்கலைப்பும் அது சார்ந்த கல்வியின் தேவைப்பாடும்

28 நல்லதை சொல்கிறோம்

30 யாழ் இந்துக் கல்லூரியின் முன்மாதிரியான செயற்பாடு

31 என் கால்கள் வழியே...

37 மரம் நாட்டும் முன் மாதிரியான மாணவர்கள்

38 ஆரம்பமாகிறது அடுத்த கிரிக்கெட் திருவிழா

வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தந்தையர் தின
நல்வாழ்த்துக்கள்

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது..!

குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை மட்டுமல்ல ஒரு தவம் என்பது இன்றைய வேகமான நவீன உலகில் பலருக்கும் தெரிவதில்லை. ஒரு குழந்தை பிறக்க முதல் தாயின் வயிற்றில் இருக்கும் போது கொடுக்கும் கவனத்தையும், அக்கறையையும், முக்கியத்துவத்தையும் அந்த குழந்தை பிறந்த பின்பு பெரும்பாலான பெற்றவர்களும் அவர்கள் தம் குடும்பத்தினரும் அளிப்பதில்லை. இன்று எமது மண்ணில் நடக்கும் கலாசார பிறழ்வுகளுக்கும், சமூக விரோத செயற்பாடுகளுக்கும் அடிப்படைக் காரணமாக இதனையே நோக்க வேண்டியுள்ளது.

நிறைய பின்னோக்கிச் செல்லத் தேவையில்லை. யுத்தத்தின் இறுதிக் காலகட்டங்கள் வரை எமது வாழ்க்கை எப்படியிருந்தது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். குழந்தை வளர்ப்பு எப்படி இருந்தது என்று சிந்தித்துப் பாருங்கள். தேவைகளும் விருப்பங்களும் குறைவாக இருந்தது. குடும்பத்தினருடனும் உறவினர் களுடனும் நண்பர்களுடனும் நேரடியாக பகிர்ந்து கொள்ள போதுமான நேரம் இருந்தது. பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருந்தன. குழந்தைகளை கவனிக்க வீட்டில் பலர் இருந்தார்கள். ஆனால் இன்றைய நிலை எவ்வாறு இல்லை.

கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்லும் தனிக் குடும்பத்தினரே... நீங்கள் ஓடி ஓடி உழைக்கும் பணம் உங்களுக்கானது என்றால் தாராளமாக அதை தொடருங்கள். அவ்வாறு இல்லாமல் அந்த பணம் உங்கள் குழந்தைக்கானதாக இருந்தால் கொஞ்சம் யோசியுங்கள். பணம் மட்டும் உங்கள் குழ்நதையின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போவதில்லை. நல்ல ஒழுக்கத்துடனான பழக்க வழக்கங்களே உங்கள் குழந்தையின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு அடிப்படை என்பதை மறவாதீர்கள். அந்த அத்திபாரம் நன்றாக இருந்தால் அந்த குழந்தை தனக்கான வளமான எதிர்காலத்தை தானே அமைத்துக் கொள்ளும். நீங்கள் அமைத்துக் கொடுக்கும் எதிர்காலத்தை விட அது பலமடங்கு சிறப்பானதாக இருக்கும். எனவே, யோசிக்கவே தேவையில்லை! உங்களில் ஒருவர் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ வேலையை விட்டு நிற்க வேண்டியது கட்டாயமானதாகிறது.

தம்பதிகளில் ஒருவர் வீட்டில் இருக்கும் தனிக் குடும்பங்களிலோ அல்லது தாத்தா பாட்டிகளுடன் வாழும் கூட்டுக் குடும்பங்களிலோ மேற்கூறிய ஆபத்தான நிலைமை இல்லை என்று கூறிவிட முடியாது.

அங்கும் பல சிக்கல் நிலைமைகள் உள்ளன. இன்று பெரும்பாலான வீடுகளில் உள்ளவர்கள் தொலைபேசிகளுக்குள்ளும், தொலைக்காட்சிகளுக்குள்ளும் தங்களை தொலைத்து விட்டார்கள். கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் எமது சமூகத்தை வேரறுப்பதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். சத்தமே இல்லாமல் எம் சந்ததிகளை இந்த தொலைத்தொடர்பு சாதனங்கள் நிர்மூலமாக்கிக் கொண்டிருக்கின்றன.

குழந்தைகள் சத்தம் போட்டு அழுது தங்கள் வேலைகளைக் குழப்பக்கூடாது என்று அந்த பிஞ்சுக்கைகளில் தொலைபேசி எனும் நஞ்சை கொடுத்து விடுகிறார்கள். அவர்களும் அதற்கு பழக்கப்பட்டவய்களாக, நாளடைவில் அதற்கு அடிமையானவர்களாக மாறிவிடுகிறார்கள். இதன் பின் குழந்தைகள் சற்று வளர்ந்ததும், தன் பிள்ளைகள் மற்ற பிள்ளைகள் போல படிப்பதில்லை, விளையாடுவதில்லை, எப்போதும் தொலைபேசியுடனேயே உள்ளது எனும் குற்றச்சாட்டை முன்வைத்து குழந்தைகளுடன் சண்டை பிடிக்கிறார்கள். குழந்தையை அதற்கு அடிமையாக்கியது அவர்கள். இப்போது குழந்தையை அதைச் செய்யாதே, இதைத் தொடாதே என்று கட்டளைகள் போட்டால் எப்படி? ஐந்தில் வளையாவிட்டால் அது ஐம்பதிலும் வளையாது தானே!

இந்தப் பிரச்சினைகளின் தொடர்ச்சி குழந்தைகளுக்கும் பெற்றவர்களுக்குமான உறவில் பெரிய விரிசல் விழக் காரணமாகிறது.

இது அனைவரது எதிர் காலத்தையும் சூனிய மாக்குகிறது. இது பல சமூகப் பிரச்சினைகளுக்கு வழிசமைக்கிறது. இது சம்பந்தமான பல உண்மைச் சம்பவங்கள் தினந்தோறும் பத்திரிகைகளில் வந்து எங்களை பயமுறுத்துகின்றன. அண்மையில் கூட, தெல்லிப்பழையில் ஒரு சிறுவன் தன் தாயை கத்தியால் குத்தியதாகவும், அதற்கு காரணம் தொலைபேசியை பறித்தமை என்றும் பத்திரிகைகள் பதற வைத்தன.

எங்கள் சமூகம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை. தாய் மண்ணுக்காக ஆயுதம் ஏந்தியவர்கள் வாழ்ந்த பூமியில் தாய்க்கு எதிராகவே ஆயுதம் ஏந்தும் துர்பாக்கிய நிலைக்கு வந்துவிட்டோம் என்பது தான் உண்மை. எல்லோருமே, நிற்க நேரமில்லாமல் தொடர்ச்சியாக ஓடிக்கொண்டே இருக்கிறோம். சில நிமிடங்களாவது நிற்போம்! சிந்திப்போம்! செயற்படுவோம்!

இந்தக் கணம் கடந்துவிட்டால் திரும்ப வராது! இதுதான் உலகத்தின் இரகசியம்!

“அயர்ன் மேன்” பயோனிக் கை பொருத்தப்பட்ட சிறுவன்

அமெரிக்காவில் இடது கை இல்லாமல் பிறந்த ஜோர்டான் என்ற 5 வயது சிறுவனுக்கு பயோனிக் கை பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மிக இளம் வயதில் பயோனிக் கை பொறுத்தப்பட்டவர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். சிறுவன் ஜோர்டானின் கோரிக்கையின்படி “அயர்ன் மேன்” படத்தில் வரும் சிவப்பு மற்றும் தங்க நிறத்தில் வடிவமைக்கப்பட்ட பயோனிக் கை அவருக்கு பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சூப்பர் ஹீரோ அந்தஸ்தையும் அவர் பெற்றுள்ளார்.

இந்த பயோனிக் கை ரீசார்ஜ் செய்யக்கூடிய பேட்டரி மூலம் இயங்குகிறது. இதை ஒருமுறை சார்ஜ் செய்தால் இது 14 மணிநேரம் வேலை செய்யும். சிறுவன் ஜோர்டானுக்கு முன்பே கடந்தாண்டு, இங்கிலாந்தைச் சேர்ந்த 10 வயது ஹாரி ஜோன்ஸ் என்ற சிறுவனுக்கு “அயர்ன் மேன்” பயோனிக் கை பொருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முழுவதுமாய் உணரமுடியாத விந்தை..! தந்தை......!

கல் தோன்றி, மண் தோன்றி, பின் ஒருசெல் உயிரி தோன்றி பரிணாம வளர்ச்சி பெற்று மனிதன் தோன்றினான் என்பது அறிவியல் கூற்று. உருவங்கள் உருவாக பரிணாம வளர்ச்சி என்ற கோட்பாடு உள்ளது. ஆனால் உணர்வுகளுக்கான கோட்பாடு வரையறுக்கப்பட முடியாதது. அம்மா, அப்பா, அண்ணன், தங்கை, அக்கா, தாத்தா, பாட்டி என ஒவ்வொரு உறவும், உறவுகளுக்கான உணர்வுகளும்தான் மனித வாழ்வின் அடித்தளம். தொழில்நுட்ப வளர்ச்சியில் தொலைந்து போன சொந்தங்களின் சந்தோஷங்கள் பல இருந்தாலும், அப்பா எனும் உறவு குழந்தையின் வளர்ச்சிக்கு அடித்தளம். கருவை உருவாக்கும் அன்னையின் பந்தம் ரத்தத்தால் இணைக்கப்படும். அப்பாவின் பந்தம் உணர்வுகளால் உணரப்படும். தந்தை என்ற உறவு சரியாக அமைந்தால் ஒரு மனிதனின் தலையெழுத்தே மாறிப்போகும்.

//தெய்வங்கள் எல்லாம்
தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே
தாலாட்டு பாடும் தாயின் அன்பும்
தந்தை அன்பின் பின்னே..//

வளரும் ஒவ்வொரு குழந்தையின் முதல் கதாநாயகன் தனது தந்தையாகத்தான் இருக்க முடியும். பல தந்தைகள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாகிறார்கள்.

தந்தை என்பவர் ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்புகிறார். வாழ்க்கைச் சக்கரத்தில் நாம் வசதியாக வாழ்வதற்காக, ஓயாமல் சுழலும்

அன்பு சக்கரம். நாம் எழுமுன் வேலைக்கு சென்று, நாம் தூங்கிய பின்பு வீடு திரும்பும் தன்னலமில்லா உள்ளம்.

//எனக்கெது தேவை உலகிலே
கொடுத்திடுவாய் நீ முதலிலே
வேண்டாமலும் தரும் தெய்வம்
நீ தானே உண்மையிலேயே...//

அப்பா என்ற வார்த்தையில் தான் எத்தனை மந்திரங்கள். தந்தை என்பவர் ஆயிரம் ஆசான்களுக்கு சமம். தன் குழந்தைகளுக்கு ஆலோசனை கூறுவதில் தொடங்கி, அனுபவ பாடங்களை போதித்து சிறந்த வழிகாட்டியாக எத்தனை பொறுப்புகள். "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்னும் ஔவையின் வாக்கில் எவ்வளவு உண்மை. உழைப்பு, சேமிப்பு, தன்னம்பிக்கையின் ஊற்று தந்தை என்றால் மிகையாகாது.

//தோழனென நீ தோளும் கொடுத்து
தோல்விகளை ஜெய்த்திட வருவாய்
சோகமெதையும் உன்னுள் மறைத்து
புன்னகையை எனக்கென தருவாய்..//

உலகெங்கிலும் உள்ள தந்தையர்களை பௌரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது.

தந்தையின் அன்பு, உழைப்பு, அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து பாராட்டி அவர்களுக்கு அன்பு செலுத்தவே தந்தையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. தந்தையர் தினத்தை நம்மில் பலரும் கொண்டாடினாலும், இந்த தினத்திற்கான பாரம்பரியம் எப்படி தொடங்கியது என பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்புகள் குறைவு தான்.

தந்தையர் தினம் உருவாகக் காரணமாக இருந்தவர் ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா. மனைவியை இழந்த தன்னுடைய தந்தையின் அரவணைப்பை போற்றும் வகையில் அந்த பெண்,

தந்தையர் தின கொண்டாட்டத்தை முன்மொழிந்தார்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஸ்போகேனில் வசித்து வந்த அமெரிக்க உள்நாட்டுப் போர் வீரர் வில்லியம் ஜாக்சன் ஸ்மார்ட்டின் மகள் சோனோரா என்னும் பெண்மணி தான் தந்தையர் தினம் உருவாக காரணமாக இருந்தார்.

சோனோராவின் தாய் தனது ஆறாவது குழந்தையை பெற்றெடுக்கும் போது இறந்தார், அதன் பிறகு சோனோராவை அவரது மூத்த சகோதரர்களுடன் சேர்த்து அவரது தந்தை பிரியத்துடன் வளர்த்தார்.

வளர்ந்த பின் ஒருநாள், அன்னையர் தினத்தைப் பற்றிய ஒரு பிரசங்கத்தை அவர் தேவாலயத்தில் கேட்டுக் கொண்டிருந்தபோது, தந்தையின் பாத்திரத்திற்கும் அங்கீகாரம் தேவை என்று உணர்ந்தார். தாய் இல்லாத ஆறு குழந்தைகளை வளர்த்தெடுத்த தன் தந்தைக்கு அன்பு செலுத்த வேண்டும் என்ற காரணத்தால், தந்தையர் தின கொண்டாட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.

அவர் அரசாங்கத்திடம் தனது தந்தை ஸ்மார்ட்டின் பிறந்தநாளான ஜூன் 5ஆம் தேதியை தந்தையர் தினமாக உலகெங்கிலும் உள்ள அப்பாக்களை மதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இந்த கோரிக்கைக்கு முதலில் ஒப்புதல் கிடைக்கவில்லை, இருப்பினும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையை தந்தையர் தினமாகக் கொண்டாட முடிவு செய்தனர்.

அதை தொடர்ந்து, 1966 ஆம் ஆண்டில், அப்போதைய அமெரிக்க அதிபர் லிண்டன் பி ஜான்சன் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்து பிரகடனத்தில் கையெழுத்திட்டார்.

முன்னதாக, 1907ம் ஆண்டு மேற்கு விர்ஜினியா பகுதியில் நிகழ்ந்த நிலக்கரி சுரங்க வெடி விபத்தில் சிக்கி 362 பேர் உயிரிழந்தனர். இவர்களுக்கு மரியாதை செல்லும் வகையில் 1908 ஆண்டு மேற்கு விர்ஜினியா பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் அஞ்சலி

செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. தந்தையர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே நடத்தப்பட்ட முதல் நிகழ்ச்சியாக இது பார்க்கப்படுகிறது.

ஒரு குழந்தையை தாய்வழி பெற்றெடுப்பவர்கள் மட்டும் தந்தை ஆகி விட முடியாது. யாரெல்லாம் ஒரு தந்தையை போல் குழந்தைக்கு வழிகாட்டி, அமைதியை, பொறுமையை, நற்குணங்களை, பண்புகளை, வாழ்க்கை கல்வியை ஊட்டி வளர்க்கிறார்களோ அவர்கள் தான் அப்பா என்ற வார்த்தைக்கு தகுதியானவர்கள் ஆகிறார்கள்.

//கண்டிப்பிலும் தண்டிப்பிலும்
கொதித்திடும் உன் முகம்
காய்ச்சல் வந்து படுக்கையில்
துடிப்பதும் உன் முகம்
அம்பாரியாய் ஏற்றிக் கொண்டு
அன்று சென்ற ஊர்வலம்
தகப்பனின் அணைப்பிலே
கிடந்ததும் ஓர் சுகம்
வளர்ந்ததுமே யாவரும்
தீவாய் போகிறோம்
தந்தை அவனின் பாசத்தை
எங்கே காண்கிறோம்..//

உடல் தந்து உயிர் தந்து முகம் தந்து முகவரியும் தந்ததாலோ தந்தை!!! முழுவதுமாய் உணரமுடியாத விந்தை!!!

சமூகத்தில் தந்தைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் நம் வாழ்த்துகள்.

ஜப்பானில் அக்குள் வியர்வையில் சோற்று உருண்டை தயாரிப்பு

ஜப்பான் உணவகங்களில் புதிதாக அக்குளை பயன்படுத்தி வியர்வை கலந்த சோற்று உருண்டைகள் தயாரிக்கப்படுகிறது. அதாவது சோறில் தயாரிக்கப்படும் ஓனிகிரி என்ற உணவு ஜப்பானில் பாரம்பரிய உணவாக உள்ளது. இந்நிலையில் இதனை கையினால் தயாரிப்பதை விட புதிதாக அக்குளுக்கு வைத்து முக்கோணமாகவும் வட்டமாகவும் செய்து விற்பனைக்கு வந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ் பல்கலையின் சமூக சமையலறை



இங்கு திங்கள் முதல் வெள்ளி வரை கிட்டத்தட்ட 500 மாணவர்கள் தங்கள் பசியினை ஆறிச்செல்கின்றனர். சமையலில் மரக்கறி வெட்டுவதில் இருந்து மாணவர்களுக்கு உணவு பரிமாறுதல் , பாத்திரம் கழுவுதல் என அனைத்து விடயங்களிலும் இவ் விரிவுரையாளர்கள் தங்களை முழு மனதோடு ஈடுபடுத்தி வருகின்றனர். மாணவர்களும் விரிவுரை தவிர்ந்த நேரங்களில் இங்கு சென்று தங்களால் ஆன உதவிகளினைச் செய்து வருகின்றனர்.

மூன்று விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ் இலவச உணவுத் திட்டத்திற்கு இன்று பல விரிவுரையாளர்கள் கைகோர்க்க ஆரம்பித்திருக்கின்றார்கள். மாணவர்கள் முடிந்தளவு தமது மதிய உணவினை பெற்றுக் கொண்டு பசியாறுகின்றனர். ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாக செயற்படும் யாழ் பல்கலைக்கழகத்தின் குறித்த குழுவினருக்கு தூமியின் புகழ் வணக்கங்கள்.

பு துஜீஸ்காந்த்

பனை பற்றி பலரையும் பேச வைத்திருக்கும் பனைத் திருவிழா

பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும். இதே பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர்ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும். இலகுவில் ஏமாறக்கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும்.நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.

பானங்களிலே அதிகூடிய புரதச்செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச்செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100gபாலிலே 3.3g புரதம் இருக்கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர்நிறையிலே 60g புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங் கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

கடந்த 26.05.2024 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பனைத்திருவிழா பனை பற்றி பலரையும் பேச வைத்திருக்கிறது. அந்த நிகழ்வின் தலைமையுரையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

எங்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த பனைகளுக்கும் எமக்குமான இடைவெளி அதிகரித்துவரும் இக் காலகட்டத்தில் அதனைத் தடுத்து நிறுத்த தோள் கொடுப்பதற்காக இங்கு வருகை தந்திருக்கும் அனைத்து அன்புள்ளங்களையும் இருகரம் கூப்பி வரவேற்கின்றேன். இவ் வருடம் வவுனியாவில் நுங்கு விழா ஒன்று மிகச் சிறப்பாக நடந்தேறியது. அந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நாம் பனைத் திருவிழாவை இன்று நடாத்துகின்றோம்.

பனம் உணவுகளை உண்டு, பனைகளில் இருந்து எத்தனையோ உற்பத்திகள் செய்து செழிப்பாகவும், வளமாகவும், தேக ஆரோக்கியமாகவும் பனைகளோடே வாழ்ந்துவந்த சமூகத்தவர்கள் நாம். 450 வருட அந்நிய நாட்டவர்களது ஆட்சிகளின் விளைவுகளால் பனைக் கலாச்சாரம் இன்று அழிவடைந்து வருகின்றது. பனைகளில் இருந்து கிடைக்கப்பெறும் உன்னதங்களை அனுபவிக்க மறுத்தவர்களாக இன்றைய தலைமுறையினர் மாறிவருகின்றனர்.

தெய்வமாகப் போற்றப்படும் பனைகளைக் காப்பதற்கும், பனைகளில் இருந்து கிடைக்கும் பயன்களைப் பெற்றுக்கொள்ளவும், பனைகளால் நாமும் நம் நாடும் பொருளாதாரத்தில் சிறந்துவிளங்கவும், பனைக் கலாச்சாரத்தைத் தொடரவும், இவை யாவற்றையும் இன்றைய மற்றும் நாளைய தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கவும் நாம் தலையாயப் பட்டுள்ளோம். எனவேதான் இப் பனைத் திருவிழாவின் ஊடாக அதற்கான முன்னெடுப்பை மேற கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

நடைபெற்று முடிந்த யுத்தத்தாலும், அதிகரித்துவரும் சன, இட நெருக்கடி மற்றும் அபிவிருத்திகள் காரணமாகவும் பனைகள் அழிவடைந்துவருகின்றன. இங்கே பனைகள் செறிந்து காட்சி தருவதைப் போல் அதிகமான இடங்களில் இப்போது பனைகள் செறிவின்றியும் இல்லாமலும் இருப்பது மிகவும் மன வேதனையைத் தருகின்றது. இந் நிலைமை மாறவேண்டும். இனியும் இந்த நிலைமை தொடர நாம் அனுமதிக்க முடியாது. இது நாம் விழிப்படைய வேண்டிய கடைசிக் காலகட்டம்.

பண்டைய இலக்கியங்கள் கூட பனையின் மகிமையை விட்டுவைக்கவில்லை. புற நானூற்றுப் பாடல் ஒன்று நல்லூரில் வாழ்ந்த நங்கையர் பனை நீர் பருகி மகிழும் நிலையை எடுத்துக்காட்டுகிறது.

கடற்கரையூர்களில் வாழும் மகளிர், கடல்முள்ளிப் பூ மாலையும், வளைகளும் அணிந்துள்ளனர். இவர்கள், இனிமையான பனை நுங்கு நீரும், கரும்பின் சாறும், தெங்கின் நீரும் உண்டு முந்நீர் பாயும் ஊரில் வாழ்கின்றனர். இது உண்ணும் உணவின் சிறப்பையும், ஊரின் வளத்தையும் உணர்த்துகிறது.

"வண்டுபட மலர்ந்த தண்ணுறுங் காணல்
முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்
இரும் பனையின் குரும்பை நீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும்
ஓங்குமணற்கு வுத்தாழைத்
தீநீரோடுடன் விரா அய்
முந்நீருண்டு முந்நீர்ப்பாயும்
தாங்கா வுறையு னல்லூர் செழீ இய!"

இது புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்ட பனை பற்றிய குறிப்பாகும். இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டுமே பனை வளம் செறிந்து காணப்படுகின்றது. இவ்வாறு உள்ளபோதும் பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு ஓர் குறிப்பிட்ட மக்களைத்தவிர ஏனையவர்கள் நாட்டம் கொள்ளவில்லை என்பதை அவதானிக்கமுடிகிறது.

தானாகவே வளர்ந்து பெரும் பயன்தரும் பனை வளத்தில் நாட்டம் கொள்ளாது முதலீடு செய்து, நிலம் பண்படுத்தி, பசளையிட்டு, நீர் பாய்ச்சி பயன் காணும் பணப்பயிர்களை பெறுமதியாகக் கணித்து

வருகின்றமையால் இன்று பனை வளத்தைக் காப்பதற்குக் கடமைப்பட்டவர்களாக மாறியிருக்கின்றோம்.

பொருளாதார பலம் குறைந்த ஒரு பகுதி மக்கள் அவதானிப்பற்ற பனை வளத்துடன் தம்மை இணைத்து அதிக வருமானம் ஈட்டுவதற்கு முழு வினைத்திறனையும் செலுத்தி வந்தாலும், நிலப்பிரபுக்களின் நிலத்தில் உள்ள பனை வளத்தை பயன்படுத்துவதால் அதிக அறவீடுகளால் பணம் சுரண்டப்படுவதால் பனை வளத்தை நம்பிய மக்களின் வாழ்க்கைத்தரம் மாறவில்லை.

இதனால்தான் இத் தொழிலாளர்களை உற்பத்தியாளர்களாகக் கொண்ட கூட்டுறவு அமைப்பினை 1972 ஆம் ஆண்டு அரசாங்கம் ஏற படுத்தியது. வட பகுதியில் 8500 உறுப்பினர்களையுடைய 30 சங்கங்கள் உள்ளன. கூட்டுறவு ஊடாக கள் உற்பத்தி மட்டுமன்றி பனஞ் சாராயமும் உற்பத்தி செய்தனர். இதற்காக ஆசியா கண்டத்திலேயே முதன் முதலாக 1974 இல் யாழ்ப்பாணம் கைதடியில் பனஞ்சாராய வடிசாலை அமைக்கப்பட்டது. அது மட்டுமன்றி பனை வெல்லம், பனஞ் சீனிகளை உற்பத்தி செய்ய 1975 இல் வடபகுதியில் 71 பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலைகளும், 3 பனஞ் சீனித் தொழிற்சாலைகளும்

நிறுவப்பட்டன. இவற்றினை நிர்மாணிப்பதற்கு ஏற்பட்ட செலவு 203 இலட்சங்களாகும். இதில் 117 இலட்சத்தை இச் சங்கங்களும் மிகுதி 86 இலட்சத்தை அரசாங்கமும் முதலிட்டிருந்தன.

பனை வளம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மட்டும் காணப்படுவதால் அரசின் ஆர்வமும் பங்களிப்பும் குறைவென்றே கூறலாம். ஏனெனில் பொருளாதாரக் கொள்கைகளால் சீனியின் விலை குறைவடைய பனஞ் சீனிக்கான கேள்வி குறைவடைந்தது. வெல்லப் பாவனையும் வீழ்ச்சியடைந்தது.

வடிசாலையில் தினமும் 200கலன் கள்ளை வடிப்பதற்குரிய வசதியே அன்றிருந்தது. இந் நெருக்கடியின் மத்தியில் 1.1.1978 முதல் இது 15% ஆக நடைமுறைக்கு அரசால் கொண்டுவரப்பட்டது. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டங்களை எதிர்நோக்கிவந்தன. பனை வளம் வடக்கு கிழக்கு மக்களுக்குக் கிடைத்த பெரும் வரம். எத்தனை எத்தனை பயன்களைத் தரவல்ல இவ் வளத்தை நாம் இழக்கக்கூடாது. இன்றைய நவீன யுகத்தில் தொழில்நுட்ப அறிவைக்கொண்டு பனை வளத்தைப் பயன்படுத்தி உள்நாட்டில் மட்டுமன்றி ஏற்றுமதிகள் ஊடாகவும் வருமானம் ஈட்டிக்கொள்ளலாம். தற்போது அதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. இதன் மூலம் எங்கள் மண் தந்த பனை வளத்தை உலகுக்கே காட்டவும் பனை சார்ந்து வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வாய்ப்பும் நல்ல வழியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இனி வரும் ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு இடங்களிலும் பனைத் திருவிழாவை நடாத்தி அனைவரிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி எம் பனைகளைக் காக்க நாம் அனைவரும் அயராது உழைப்போம் வாரீர்!

பனையைக் காப்போம்!
மனையைப் பெருக்குவோம்!

- நன்றி -

வரலாற்றில் தடம் பதித்த பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழாவை நடத்தின.

கடந்த 11ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கமும் , மறுநாள் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கமும் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் “பேராசிரியர் வித்தியானந்தனின் மனப்பதிவுகள்” கட்டுரைத் தொகுப்புநூல் வெளியிடப்பட்டது. யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் “விழுமியக் கல்வியின் தேவையும் போக்கும்” எனும் தலைப்பில் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். ஆசியுரை வழங்கிய கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் பேராசிரியர் வித்தியானந்தனின் முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை சபையோருக்கு எடுத்துரைத்தமை கேட்போரை வியக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது.

அத்துடன் பேராசிரியர் வித்தியானந்தனின் அளிக்கை பாணியில், பேராசிரியர் சி. மௌனகுருவின் நெறியாள்கையில் இராவணேசன் கூத்து அளிக்கை மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் து. அயூரனின் நெறியாள்கையில் காத்தவராஜன் கூத்து அளிக்கையும் இடம்பெற்றன. பேராசிரியர் சண்முகதாஸ் கூத்துப்பாடல் பாட பேராசிரியர் மௌனகுரு கூத்து அளிக்கை செய்த சிறப்பு நிகழ்வு அனைவர் கவனத்தையும் ஈர்த்தது. ஈழ மணித்திரு நாட்டின் இருபெரும் ஆளுமைகள் ஒரே மேடையில் வயோதிபத்தையும் தாண்டி கலைஞர்களாக மாறியமை காலமுள்ளவரை வரலாற்றில் பதிந்திருக்கும்.

இதனை இதனால்
இவன் முடிக்கும் என்றாய்ந்து
இறைவன் அதனை
அவன் கண் விட்டனன்...!
ஆறு. திருமுருகனாய்
அவதரித்தனன் உலகம் உய்ய..!

ஈழத்தின் குரவராய்...
இந்த நூற்றாண்டின் நாவலராய்...
மக்கள் சேவையோடு
மகேசன் சேவையும் செய்யும்
மகானை ~ அவதார நாளில்
போற்றி வணங்குகிறது தூமி..!

சிறப்பாக நடைபெற்ற செஞ்சொற்செல்வரின் பிறந்தநாள் நிகழ்வுகள்

"ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே"

சம்பந்தர் பெருமானின் கோளறு பதிகத்தின் வரிகள் இவை. நவக்கிரகங்களின் தன்மை பற்றி கூறிய சம்பந்தர் அவற்றின் பார்வை எத்தகையதாக இருந்தாலும், இறைவன் மீது உண்மை பக்தியும் நம்பிக்கையும் கொண்ட மெய்யடியார்களுக்கு நாளும் கோளும் நல்லனவே செய்யும் என்கிறார். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லாமல் எல்லாவற்றுக்கும் நாளும் கோளும் பார்த்து, நவக்கிரகங்களுக்கு அஞ்சி நற்காரியங்களையும் பிற்போட்டுக் கொண்டிருக்கும் எம்மவர் மத்தியில் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா வித்தியாசமாக தெரிகிறார்.

தொடர்ந்து சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் பல பணிகளை இடையறாது ஆற்றி வருகிறார். இறைவனை முழுமையாக நம்பி ஒரு நற்கருமம் தொடங்கினால், சாதகப்படி எங்கள் பலன் எதுவாக இருந்தாலும் நாளும் கோளும் நல்லனவே செய்யும் என்கிற நம்பிக்கை இவருக்கு உண்டு. இதுவரை மட்டுமல்ல எப்போதும் அவர் தொட்டவை எல்லாம் துலங்கியதாகத்தான் வரலாறு உள்ளது.

செஞ்சொற்செல்வர் அவர்களின் பிறந்தநாள் அன்று (28.05.2024) அதிகாலை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வழிபாடுகளில் கலந்து கொண்ட செஞ்சொற்செல்வர் அவர்களுக்கு மகளீர் இல்ல பிள்ளைகள் உள்ளிட்ட

ஆலய சமூக்கததினர் தங்கள் அன்பை வெளிப்படுத்தி ஆசிகளை பெற்றனர். அதன் பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் 63 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சிவபூமி அறக்கட்டளையினால் முதலாவதாக கொள்வனவு செய்யப்பட்ட பூமியில், சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் அவருடன் சேர்ந்து 63 மரக்கன்றுகளை (28.05.2024) நாட்டி வைத்தனர்.

சிவபூமி தனது பல்தரப்பட்ட சேவைகளால் இன்று பல்கிப் பெருகி பல கிளைகளோடு காணப்பட்டாலும் சிவபூமியின் ஆரம்பம் என்பது மனவிருத்திப் பாடசாலை தான். அந்த வகையில் தலைவரின் பிறந்த தினம் அந்த இடத்தில் கொண்டாடப்பட்டமை சிறப்பம்சமாகும். மேலும், நாட்டிய மரக்கன்றுகள் வேரூன்றி வளர்ந்து பயன்தருவது போல, சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்களும் வளர்ந்து எமது மண்ணிற்கு பயனுள்ளவர்களாக வேண்டுமென்பதே செஞ்சொற்செல்வர் அவர்களின் பெரு விருப்பம்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து பிள்ளைகளுக்கு மதிய உணவு மற்றும் சிற்றுண்டி என்பவற்றை தலைவர் பரிமாறி மகிழ்ந்தார். இந்நிகழ்வில் ஆன்மீகச்சுடர் ரிஷி. தொண்டுநாத சுவாமிகளுடன் சிவபூமி உறவுகளும் கலந்து கொண்டனர்.

அடுத்ததாக மாலை வேளையில் தொல்புரத்தில் உள்ள சிவபூமியின் முதியோர் இல்லத்தில் உள்ள மூத்தோர் ஏற்பாடு செய்திருந்த விழாவில் கலந்து கொண்ட செஞ்சொற்செல்வர் அவர்களுக்கு பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தனர். முதியோருடன் இராப்போசனத்தையும் உண்டு அவர்களின் அன்பு மழையில் செஞ்சொற்செல்வர் முழுவதுமாக நனைந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

நிகழ்வுகளுக்கெல்லாம் மணிமகுடம் வைத்தது போல கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை நிதிய சபை ஏற்பாட்டில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது -2024 நிகழ்வு எதிர்வரும் 02.06.2024 தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் திருமண மண்டபத்தில் இடம்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பலரின் உயிரைக்காக்கும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர்.ஞா.காந்திஜி அவர்களுக்கும், 13வயதில் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டிய திருக்கோணமலை கோணேஸ்வராக்கல்லூரி மாணவன் ஹரிகரன் தன்வந்த் அவர்களுக்கும் இவ்வாண்டுக்கான விருது கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தது கபோசு நாய்

உலகம் முழுவதும் மீம்ஸ் மூலம் பிரபலமான விஷயங்களில் கபோசு (Kabosu) நாயும் ஒன்று. அந்த அளவுக்கு பல ரியாக்சன்களை கொடுத்து நம்மை வியப்பில் ஆழ்த்தும். இந்நிலையில் கபோசு நாய் மே 24 காலை 7:50 மணியளவில் உடல்நலக் குறைவால் உயிரிழந்தது. 18 வயதான கபோசு உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த துயரமான செய்தியை கபோசுவின் உரிமையாளர் தனது சமூக வலைதள பக்கத்தில், "வழக்கம் போல இரவு சாப்பாடு சாப்பிட்டுவிட்டு தூங்குச் சென்ற கபோசு தூக்கத்திலேயே உலகத்தை விட்டு பிரிந்தது. உலகத்தில் அதிக அன்பை பெற்றுக்கொண்ட நாய் என்றால் அது கபோசு தான். அதைப்போல, அவளைப் பெற்ற மகிழ்ச்சியான நபர் நான் தான். இத்தனை வருடங்களாக கபோசுவை நேசித்ததற்காக உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி" எனப் பதிவிட்டுள்ளார். அதோடு, மே 26-ம் தேதி இறுதிச்சடங்கு நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ஜப்பானை சேர்ந்த ஒருவர் இந்த நாயை வளர்த்து வந்த நிலையில், இதனை வைத்து 2010-ஆம் ஆண்டு போட்டோ ஷூட் செய்து அதனை வெளியிட்டபோது பிரபலமாக தொடங்கியது. அதன்பிறகு, இந்த நாய் கொடுத்த ரியாக்ஸன் மூலம் மிகவும் வைரலாக 2013ம் ஆண்டில் இதனுடைய படத்தை அதன் லோகோவாகப் பயன்படுத்தி கிரிப்டோ கரன்சியான Dogecoin உருவாக்கவும் தூண்டியது என்பதும் கவனிக்கத்தக்கது. எலான் மஸ்க் எக்ஸ் சமூக ஊடக நிறுவனத்தை வாங்கிய பின், முன்பு இருந்த பறவை லோகோவை மாற்றினார். பின்னர் இந்த கபோசு லோகோவை மாற்றியது குறிப்பிடத்தக்கது.

எவரெஸ்ட் சிகரத்தை இரண்டே வாரத்தில் மூன்று முறை ஏறிய நபர்

உலகின் மிக உயரமான சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை இரண்டே வாரத்தில் மூன்று முறை ஏறிய நபர் என்ற சாதனையை நேபாள மலையேறும் புகைப்படப் பத்திரிக்கையாளருமான பூர்ணிமா ஷ்ரேஸ்தா படைத்துள்ளார். பூர்ணிமா முதலில் மே 12 அன்று எவரெஸ்ட் சிகரத்தின் 8848.86 மீட்டர் உச்சத்தை அடைந்தார். மீண்டும் அவர் மே 19 அன்று பசாங் ஷெர்பாவுடன் இணைந்து உச்சியை அடைந்தார். அடுத்ததாக மே 25 காலை 5:50 மணிக்கு மூன்றாவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார். பூர்ணிமா எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவது இது நான்காவது முறையாகும். 2018 ஆம் ஆண்டு முதல் முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் அவர் ஏறினார். மேலும், அவர் மனாஸ்லு, அன்னபூர்ணா, தௌலகிரி, கஞ்சன்ஜங்கா, லோட்சே, மகலு மற்றும் மவுண்ட் கே2 உள்ளிட்ட உயரமான பல மலை சிகரங்களை வெற்றிகரமாக ஏறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கௌரவ டொக்டர் பட்டம் வழங்கப்பட்ட பூனை

அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் பூனைக்கு கௌரவ டொக்டர் பட்டம் வழங்கப்பட்ட செய்தி வைரலாகியுள்ளது. அமெரிக்காவிலுள்ள வெர்மான்ட் மாநில பல்கலைக்கழக வளாகத்தில் மேக்ஸ் என்ற பூனை வசித்து வருகிறது. 4 ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தையே சுற்றிவரும் குறித்த பூனை, மாணவர்களிடமும் நட்புடன் பழகும் தன்மையைக் கொண்டுள்ளது. அத்துடன் குறித்த பூனை பல்கலைக்கழக

வளாகத்தில் உள்ள குப்பைத் தொட்டிகளை பொறுப்புடன் பராமரிப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் மேக்ஸ் பூனையின் சேவையைப் பாராட்டி குறித்த பல்கலைக்கழகம், கௌரவ டொக்டர் பட்டம் வழங்கி உள்ளது.

கனிஹீரா ஜெயகாந்தன்

கருக்கலைப்பும் அது சார்ந்த கல்வியின் தேவைப்பாடும்

கருக்கலைப்பு எனப்படுவது தனது சுயவிருப்பம், அறிவு, சுயநினைவு போன்றவற்றுடன் தனது வயிற்றில் முளையமாக இருக்கும் கருவை குறித்த பெண்ணின் வயிற்றிற்குள்ளேயே அழித்து அதனை அகற்றிவிடுவது ஆகும். அதாவது முளையம் (embryo) அல்லது முதிர்கரு (fetus) ஒரு பெண்ணின் கருப்பைக்கு உள்ளேயே இருக்கும் போது அது இந்த உலகத்தில் உயிர்வாழக்கூடிய தன்மையை அடைவதற்கு முன்னர் அதனை அழித்துவிடுவதனை குறித்து நிற்கின்றது. இலகுவாக குறிப்பிடுவதாயின் ஒரு கருவின் வாழ்தகவைச் செயற்கையான முறைகளினால் இல்லாது போகச் செய்தல் கருக்கலைப்பு (Induced Abortion) எனப்படும்.

இது பெண்களின் உடலை மட்டுமன்றி உணர்வுகளையும் கடுமையாகப் பாதிக்கின்ற ஒரு நிகழ்வாகும். சுமார்

54 நாடுகளில் கருக்கலைப்பு சட்ட பூர்வமாக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 97 நாடுகளில் கருக்கலைப்பு என்பது சட்டபூர்வமற்ற விடயமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 46 மில்லியன் கருக்கலைப்புகள் உலகில் இடம் பெறுகின்றன. இவற்றில் 20 மில்லியன் கருக்கலைப்புகள் சட்ட பூர்வமற்றதாகும்.

ஒவ்வொரு நாளும் 126000 கருக் கலைப்புக்கள் இடம்பெறுகின்றன. பிரித்தானியாவில் கருக்கலைப்பு தொடர்பான சட்டங்கள் மிகவும் தளர்வாக்கப்பட்டுள்ளன. அதனால் அங்கு வருடந்தோறும் 15000 கருக்கலைப்புக்கள் இடம் பெறுகின்றன. அயர்லாந்தில் கருக்கலைப்பு செய்வது சட்ட விரோதமானது என்பதனால் அங்குள்ள பெண்கள் பிரித்தானியாவிற்கு சென்று கருக்கலைப்பில் ஈடுபடுகின்றனர். இலங்கையை பொறுத்த வரைக்கும் நாளொன்றிற்கு 600-1000 கருக்கலைப்பு சம்பவங்கள் பதிவாவதாக அறிக்கையொன்று சுட்டிக்காட்டுகின்றது.தற்காலத்தில் 15-17 வயதிற்கு இடைப்பட்ட கட்டிளமைப் பருவதத்தினரிடையே கருக்கலைப்பு வீதம் சடுதியாக அதிகரித்துள்ளது. எனினும் திருமணமானவர்களின் 70 % கருக்கலைப்பு விகித்துடன் ஒப்பிடும் போது கட்டிளமைப்பருவத்தினரின் விகிதம் குறைவாகும். எமது நாட்டினை பொறுத்த வரைக்கும் கருக்கலைப்பு என்பது சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

கருக் கலைப்பு நிகழ்வதற்கான பிரதான காரணங்களாக பின்வரும் காரணங்கள் வைத்திய நிபுணர்களால் அடையாளங் காட்டப்படுகின்றன.

திருமணத்திற்கு முன்னரான பாலுறவு (Premarital sexual Intercouse), காதலித்து ஏமாற்றப்படல், வன்புணர்ச்சி (Rape), கல்வியைத் தொடர, குடும்பக்கட்டுப்பாட்டுமுறைகளின் தோல்வி, பல பிள்ளைகள் தொந்தரவு என்னும் மனப்பான்மை, கணவன் மீதான வெறுப்பு, குழந்தை வளர்க்க ஆதரவின்மை, பொருளாதார ரீதியான வளங்களின் பற்றாக்குறை இவ்வாறான காரணிகளையும் தவிர இன்னும் பல காரணிகளும் கருக்கலைப்பினை ஊக்குவிக்கின்ற காரணிகளாக அமையப்பெறலாம்.

கருக் கலைப்பானது அவை நடைபெறுகின்ற நோக்கங்களைப் பொறுத்து மாறுபடுகின்றன. அந்தவகையில் கருக்கலைப்பின் வகைகளாக பின்வரும் வகைகள் காணப்படுகின்றன.

வலுக்குறைந்த கருக்களை அழித்தல் (Eugenic Indication) தாயின் கருவிலுள்ள குழந்தையானது எதிர்காலத்தில் குறைபாடுடையதாக பிறக்க வாய்ப்பு உள்ளதாயின் அதனை கருவிலேயே அழித்தல். (ultra sound) மூலம் கண்டு பிடித்து அழித்தல்.

சமூக ஒழுக்கநெறிசார் கருக்கலைப்பு (Ethical Indication) பாலியல் குற்றச்செயல், பாலியல் வன்புணர்ச்சி (Rape) போன்றவற்றின் மூலம் உருவாகும் கருவை குறித்த பெண்ணின் சமூக அந்தஸ்து மற்றும் எதிர்கால குடும்பநலன் போன்றவற்றினை கருதி கருக்கலைப்பு செய்தல்.

சமூகச் சூழமைவு சார் கருக்கலைப்பு (Social Indication) குழந்தையின் எதிர்காலத்தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையினாலும் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக அழித்தல்.

மருத்துவம் சார் கருக்கலைப்பு (Medical Indication) ஒரு பெண்ணின் வயிற்றில் உருவாகிய கருவானது குறித்த அந்த பெண்ணின் உயிருக்கு ஆபத்தினை அல்லது மரணத்தை ஏற்படுத்தும் நிலையில் வைத்தியரினால் கருக்கலைப்பு செய்யப்படுவதை இது குறித்து நிக்கின்றது.

இவ்வாறான கருக்கலைப்பு செயலில் ஈடுபடுபவர்கள் மட்டில் குடும்பங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்.

குடும்பத்தவர்கள் இவர்கள் இதை விரும்பிச் செய்யவில்லை என்பதை உணரவேண்டும், அவர்களுக்கு அன்பும் ஆதரவும் புரிந்துணர்வு காட்ட வேண்டும், பிள்ளையை பெற்றெடுத்து வளர்க்க அல்லது

தத்துக் கொடுக்க உதவி செய்ய வேண்டும், இவர்களின் இந்த அனுபவத்தை கணவருக்குக் காட்டிக் கொடுக்காமல் காப்பது நல்லது நல்ல கணவராக இருந்து அவர் இவளை எற்று அன்பு செய்வார் என்பது நிச்சயம் இருந்தால் மட்டும் உண்மையைச் சொல்லலாம், திருமணத்திற்கு முன்னரான உறவால் ஏற்பட்டது எனின் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தல் நல்லது, கன்னிப் பெண்களாயின் இல்லங்களில் வைத்து குழந்தையைப் பெற்றெடுக்க வழி சமைத்தல் வேண்டும், எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாமல் தடுக்க இளைஞர் யுவதிகளுக்கு பாலியல் கல்வி குடும்பத்திட்ட முறைகளை பின்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், திருமணத்திற்கு முன்னரான பாலுறவைத்தவிர்த்தல், சட்டரீதியான பரிகாரம், உளவளத் துணையை வழங்குதல் போன்ற உதவிகளை மேற்க்கொண்டு அவர்களுக்கு உறுதுணையாக செயற்படவேண்டும்.

கருக்கலைப்பு இலங்கையில் சட்ட விரோத செயலாகும். ஆனால் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மருத்துவரீதியில் பரிந்துரைக்கப்படும் போது அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதனால் தேவையற்ற கர்ப்பத்தினைத் தடுப்பதற்கு பாதுகாப்பான பாலுறவினை மேற்கொள்வது அவசியமாகும். எவ்வாறாயினும் நீங்கள் தேவையற்ற கர்ப்பம் என்று கருதுகின்றீர்களாயின் தயவு செய்து குடும்பத் திட்டமிடல் சங்கத்தின் உதவியினை நாடுங்கள். அவர்கள் ஆலோசனைகளை வழங்கி மாற்று வழிகள் தொடர்பில் வழிகாட்டுவதற்கு எப்பொழுதும் தயாராக உள்ளனர்.

அடிப்படை மருத்துவ அறிவற்றவர்களால் தரமற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமலும் மேற்கொள்ளப்படும் கருவை கலைக்கும் செயற்பாடே பாதுகாப்பற்ற கருக்கலைப்பாகும். இது உயிருக்கு ஆபத்தினை விளைவிக்கும் ஓர் செயற்பாடாக உள்ளதுடன் எதிர்காலத்தில் குழந்தைப் பேற்றுக்கான வாய்ப்பினையும் இது பாதிக்கின்றது.

கடவுள் கொடையாக வழங்கப்படுகின்ற குழந்தைச் செல்வங்களை அழிப்பதற்கு சட்டரீதியான அனுமதி யாருக்கும் கிடையாது. எனினும் கருக்கலைப்பு பற்றிய போதிய அடிப்படை அறிவின்மை காரணமாக சமூகத்தில் பல பிறழ்வு நடத்தைகளை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறான பிறழ்வு நடத்தைகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவும் மக்கள் மத்தியில் அறிவினை வழங்கி அவர்களை தெளிவுபடுத்தும் முகமாகவுமே இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.

நல்லதை சொல்கிறோம்...

வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்.

வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் எமக்கு கைக்கொடுப்பது கல்வி என்ற ஒற்றை தாரக மந்திரமேயாகும். அதற்கான வரபிரசாதங்கள் யாவருக்கும் கிடைப்பது அரிதாகவே உண்டு. இதில் குடும்பநிலை, வறுமை, மாணவன் வளரும் சூழல், நட்பு வட்டாரங்கள் மற்றும் சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டல் என பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. அண்மையில் யுனெஸ்கொ வெளியிட்ட அறிக்கையின்படி, உலகளாவிய ரீதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் 1.7 பில்லியன் எண்ணிக்கையில் அமைந்துள்ளது கவலைக்குரிய விடயமாகும். போட்டி நிறைந்த உலகில் நவீனமயமாக்கம் கல்வியிலும் தனது செல்வாக்கை தினம் தினம் புதிதாய் வடிவமைகின்றது. இதனை உள்வாங்கிக்கொள்வதில் மாணவர்கள் ஆவல் மிக்கவர்களாக உள்ளனர். இன்றைய சூழலில் மாணவர்கள் வெறுமனே பத்தக புச்சிகளாக இருப்பது பொருத்தமற்றதாகும். போட்டிமயமான கல்வியில் தேடல், முயற்சி, ஆர்வம் இருப்பின் ஒவ்வொரு மாணவனும் தனது வெற்றிக்கான பாதையை இலகுவில் அடைகின்றான். ஜப்பான், தாய்வான், சிங்கப்பூர் போன்ற கிழக்காசியா நாடுகளில் கல்விக்கான நடைமுறைகள் மாணவனின் துறை சார்ந்த தேர்ச்சியின் அடிப்படையில் காணப்படுகின்றது. ஆனால் எம் நாட்டில் அனைவருக்கும் ஒரே கல்வித்திட்டம் கீழ் க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம், பல்கலைக்கழகங்கள் என செல்கின்றன.

இங்கு ஓர் வடிகட்டல் முறையிலான கல்விமுறைமை மாணவர்களுக்கு தனது திறன்களை ஊக்கப்படுத்துவதாக

இல்லை. மாறாக பரீட்சையின் பெறுபேறுகளை வைத்து மாணவர்களை புறம் தள்ளும் விதமாக உள்ளது. இச் செயற்பாடுகள் மாணவர்களது திறமைகளை மழுங்கடிகின்றன. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையந்த மாணவர்கள் தனியார் அல்லது அரச பல்கலைகழகங்களுக்கு செல்கின்றனர்.

க.பொ.த உயர்தர பெறுபேற்றில் அடைவு மட்டத்தை அடையாதவர்கள் பலர் தனது கல்விக்கான எதிர்காலம் அத்துடன் முடிந்து கொள்வதாக எண்ணுகின்றனர். இது முற்றிலும் தவறு. பல்வேறுபட்ட வாய்ப்புக்கள் மாணவர்கள் திறன்தேர்ச்சிகளை வளர்த்துக்கொள்ள காணப்படுகின்றன. அவை மொழி, தொழினுட்பம், கணனி அறிவுத்தேர்ச்சிகள் என இன்னும் பல சந்தர்ப்பங்கள் உண்டு.மாணவர்களின் திறமை, ஆர்வம் எத்துறையில் காணப்படுகின்றதே அதனில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும். அரசினாலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களினாலும் வழங்கப்படுகின்ற NVQ பாடநெறிகள் கைத்தொழில் முதல் வடிவமைப்பு, சித்திரக்கலை, வியாபாரம் என பரந்துப்பட்டு காணப்படுகின்றன. இதன் தகைமைகள் பாடநெறிகளையை பொருத்து NVQ 1,2,3 என குறுகிய கால இடைவெளியில் கற்றுக்கொள்ள முடியும். அரச பல்கலைகழகங்களிலும் பல்வேறு பாடநெறிகள் மாணவர்களின் விருப்பத்தெரிவில் இணைந்து கற்க முடியும். அதற்கான தகைமைகள் பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் (University handbook) வருடந்தோறும் க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் முடிவில் வெளியிடப்படும். மாணவர்கள் இதனை கருத்தில் கொள்ளாது பல்கலைகழகங்களுக்கு தனது தெரிவிற்குரிய பாடநெறிகளை அணுகுவதானால், க.பொ.த உயர்தர பெறுபேற்றில் 3B பெற்ற மாணவர்கள் கூட பல்கலைகழக வாய்ப்பை தவற விடுகின்றனர். விண்ணப்பத்தற்கான தகைமைகளை முறையாக கருத்தில் கொண்ட மாணவர்கள் 3C பெற்றும் பல்கலைகழகங்களுக்கு தெரிவானது குறிப்பிடத்தக்கது. பல்கலைகழகத் தெரிவின் போது பல்வேறு சந்தேகங்கள் நுண்ணறிவு பரீட்சைகள் (IQ Exams) உளச்சார்பு பரீட்சைகள் (Attitude Exams) மாணவர்களுக்கு காணப்படின், உமது பிரதேச ஆசிரியர்களிடம் அல்லது பட்டதாரி மாணவர்களிடம் உரிய ஆலோசனைப் பெற்று விண்ணவிப்பது சிறந்ததாகும். உமது கல்விக்கான பாதை உமது தெரிவியிலிருந்து வாழ்க்கையை தீர்மானிக்கின்றது.

யாழ் இந்துக் கல்லூரியின் முன்மாதிரியான செயற்பாடு

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த விஞ்ஞான பிரிவு மாணவர்களில் ஒரு பகுதியினருக்கான உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் செய்முறைகள் யாழ் இந்துக் கல்லூரியில் மே மாதம் 16,17ம் திகதிகளில் ஒழுங்குபடுத்தப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், யாழ் பல்கலைகழக விரிவுரையாளர்கள் வளவாளர்களாக பங்கேற்றிருந்தனர். இவர்களுக்கு நிகழ் நிலையாக ஆரம்பத்தில் இருந்து யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர்களால் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை சங்காரவேல் நிதியம் நெறிப்படுத்தி வருகின்றனர்.

வடக்குக் கிழக்கு மாணவர்களிடையே ஏற்படுத்தப்படும் இந்த பிணைப்பு எதிர்கால சமுதாய மேம்பாட்டிற்கு மிகமுக்கிய பங்களிப்பு செய்யும். அதோடு போட்டி போட்டு இயங்கும் பாடசாலைகளுக்கு மத்தியில் ஏனைய பாடசாலைகளின் மாணவர் மேம்பாட்டிற்காகவும் பாடுபடும் யாழ் இந்துக் கல்லூரியின் இச்செயற்பாடு ஏனைய பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் முன்னுதாரணமாக உள்ளது. போட்டி பொறாமை இன்றி கல்விச் செல்வத்தை மற்றவய்களுக்கு அளிக்க அளிக்க கூடுமே தவிர குறையாது.

ஐ.வி.மகாசேனன்

5

என் கால்கள் வழியே...

டெல்லியில் ஆரம்ப நாட்கள்!

டெல்லியின் ஆரம்ப நாட்கள் நான் தங்கியிருந்த தமிழ் நாட்டு நண்பர்களின் விடுதிக்கும் எனது பல்கலைக்கழகத்துக்குமான நடையிலேயே காலம் போனது. ஆம்! பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நாளும் பதிவது அவசியமாகின்றது. எனது இரண்டு வருட இந்திய பயணத்தை வடிவமைப்பதில் அதீத பங்கு பல்கலைக்கழகத்துக்கான முதல் நாள் பயணமும் சந்திப்பும் ஏற்படுத்தியிருந்தது.

காரணத்தை மின்னஞ்சலில் அனுப்பியிருந்த போதும் பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. நான் செப்ரெம்பர்-14அன்று முதலாவது விரிவுரைக்கு சென்றேன்.

ஆம், தமிழ்நாட்டு நண்பன் ஒருவனுக்கும் காலையில் விரிவுரை இருந்தமையால் அவனுடன் நடையில் பல்கலைக்கழக வளாகம் சென்றாச்சு. என்னுடன் வந்த நண்பன் முதுகலைமானி பௌதீகவியல் கற்கையை தொடர்பவன். அவர்களுடைய துறை வளாகத்துக்கு எதிர் வளாகத்திலேயே கலைப்பீட

முன்னரே பதிவு செய்திருந்தேன். செப்டெம்பர்-04ஆம் திகதியே விரிவுரைகள் ஆரம்பித்துவிட்டதாக டெல்லி பல்கலைக்கழக அரசறிவியல் துறை இணையப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் எனது தாமதத்துக்கான

வளாகம் காணப்படுகின்றது. இது உலகப்பொது வழமை ஆச்சே. இந்த சந்தர்ப்பத்தில என் பாடசாலை நினைவுகளையும் சிறிது பகிர்ந்துட்டு போவம். டெல்லியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துட்டு போவம். யாழ்ப்பாணம் இந்து கல்லூரி. என் அன்னையவள். நாம க.பொ.த உயர்தரம் படிக்கேக்க (2013) இன்றைய சபாலிங்கம் அரங்கின் மேடைப்பகுதி தான் எங்கள் கலைத்துறையின் வகுப்பறை எதிர் முனை கலைத்துறையின் மற்ற பிரிவின் வகுப்பறை. அதாவது ஞான வயிரவர் கோயில் வளாகத்தில தான் கலைத்துறையின் வகுப்பறைகள். க.பொ.த உயர்தரத்தின் கணிதம் மற்றும் உயிரியல் துறையின் வகுப்பறைகள் வீதிக்கு மறுபக்கம் குமாரசுவாமி மண்டப வளாகத்தில் காணப்படும். டெல்லி பல்கலைக்கழகத்தின் வடிவமைப்பும் எனக்கு எங்கன்ட பாடசாலை ஞாபகத்தை தான் இழையோடிச்சுது.

அதுசரி. நாம மறுபடியும் டெல்லிக்கே வருவம். ஒருவாறாக பல்கலைக்கழக வளாகத்துக்குள் நின்றவர்களிடம் வழிகேட்டு நம்ம அரசறிவியல் துறையை தேடி கண்டுபிடிச்சு போயாச்சு. அங்க போய் அலுவலகரிடம் நான் என் தத்து மொழியில் ஆங்கிலத்தில் என் அறிமுகத்தை கொடுக்க. அலுவலக ஊழியர்களும் தத்து மொழியில் ஆங்கிலத்தில் பதிலளித்தனர். எனினும் அவர்களது பதில் சரியாக புரிவதற்கு முன்னரே, அலுவலக தேவைக்காக வந்திருந்த இன்னொரு அறியாதவர் தன் அறிமுகத்தை கூறி, தானும் என் வகுப்பின் சகபாடி என்பதை விழித்தார். அன்றைய அறிமுகத்தில் சகபாடியாக அமைந்த சத்யபிரகாஷ் ராஜ்புத் என்கின்ற சத்யாவே பின்னாளில் என் நெருங்கிய தோழனாயும், புதிய தோழர்களை அறிமுகப்படுத்தியவனாயும், இந்தியா பற்றிய, இந்து மதத்தை பற்றிய புரிதல்களையும் கேள்விகளையும் உருவாக்கியவனாகவும், பல சந்தர்ப்பங்களில் ஆசானாக புரியாத பாடங்களை கற்பிப்பவனாகவும் தொடர்ந்தான்.

செப்டெம்பர்-14 பல்கலைக் கழகத்துக்கான விஜயம் சத்யாவினது அறிமுகத்துக் கானதாகவே அமைந்தது. சத்யாவின் அறிமுகத்தினாலேயே அன்றைய தினம் விரிவுரைகள் இல்லை என்ற செய்தியையும் அறிந்து கொண்டேன். தொலைபேசி இலக்கங்களை பரிமாறி கொண்டோம். மறுநாள் காலை தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு விரிவுரைகள் இருப்பதை

உறுதிப்படுத்தியதுடன், காத்திருந்து விரிவுரை மண்டபத்திற்கு என்னை அழைத்து சென்றிருந்தார். ஆரம்ப நாட்களில் புதிய இடங்களில் இயல்பாக தொற்றும் தனிமை எனும் கூச்சத்தை கலைத்து சந்தித்த முதல் நாளில் இருந்தே டெல்லியை எனக்கு இயல்பாக்கியதில் சத்யாக்கு அதிக பங்கு காணப்படுகின்றது. சத்யாவின் இயல்பான நட்பும், சூழல் ஹிந்தி மொழி பேசுவதனால் நான் காட்டும் தயக்கத்தை புரிந்து எனக்கு தேவையான உதவிகளை கேட்டு கேட்டு செய்யும் பண்பே என்னை டெல்லியுடன் இயல்பாக்கியது.

சத்யாவினால் எனக்கென்றொரு சிறு நட்பு வட்டம் உருவாகியது. அந்த வட்டத்தின் முதல் பிணைப்பில் சத்யா, பிரதீப், சாகர், யஸ்வந் மற்றும் நிசாந். இந்த நண்பர் குழாம் சுவாரஸ்யமானது. ஒவ்வொருத்தருமே வெவ்வேறு மாநிலத்தவர். சத்யா மத்யபிரதேஷ் (MP). பிரதீப் உத்தரபிரதேஷ் (UP). சாகர் உத்தரபிரதேஷ் எனினும் அவன் தன்னை அறிமுகப்படுத்துகையில் வரணாசி என்பதையே விளிப்பான். யஸ்வந் பீஹார். ஏனைய நண்பர்கள் பீஹாரி என கேளியாக விளிப்பதையும் அவன் பெருமையாக சிரித்து கடந்து செல்வான். இடப்பெயரை சொல்வது என்ன கேளினு குழம்பாதீங்கள். பொருளாதாரம் மற்றும் கல்வி மட்டத்தில் பீஹார் மாநிலம் வளர்ச்சி குறைவானதாகும். நிசாந் அசாம். இந்தியாவின் வடகிழக்கு பிராந்தியம். இப்பிராந்திய மக்கள் பெரும்பாலும் சீன மக்களின் உடற்தோற்றத்தை கொண்டிருப்பார்கள். நிசாந் அவ்வாறான தோற்ற வெளிப்பாடு இல்லை. எனினும் ஏனைய நண்பர்கள் சைனிஸ் என கேலி செய்வார்கள். நிசாந் சினந்து பார்த்ததில்லை.

இந்த முதல் பிணைப்பு நட்பு வட்டத்துக்கு வெளியே சத்யாவின் உறவு முறை தோழியான அர்ச்சனா மூலம் கிடைக்கப்பெற்ற அக்ஷையை சூழ்ந்து ஒரு நண்பர் குழாம். மேலும் சிவா பயில்வான் எனும் ஒரு சிநேகிதன். பல பல வட்டங்களாய் இரு வருட டெல்லி பல்கலைக்கழகம் பல நண்பர்களை இணைத்து தந்தது. நண்பர்களுடன் இந்தியா பற்றி, இந்து மதம் பற்றி பல்வேறு வாதங்களை தொடருவோம். என்னுடைய நட்பு வட்டங்கள் எல்லாவற்றிலுமேயே நண்பர்கள், மாநிலம் மாத்திர மன்றி கொள்கையளவிலும் வேறுபட்டவர்கள். ஆனால் நண்பர்களானோம். வேறுபாட்டை சுட்டிக்காட்டி கேலிகளை செய்வோம். ஆனால் சினங்கொண்டு பிளவுற்றதில்லை. என் நட்பு வட்டத்தின் இயல்பு, மொழி மற்றும் கலாசராத்தால் வேறுபட்ட இந்தியா எப்படி ஒரு நாடா இருக்குது என்பதை பட்டறிவில் புரிய வைத்தது. நண்பர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும்

வாதங்களிலிருந்து பல யதார்த்தங்களை பட்டறிவில் பெறக்கூடியதாக அமைந்தது. அவற்றையும் இடையிடையே தொடரில் தொடராய் பதிவு செய்வேன். அது சில தேடலுக்கான ஆதாரமாக அமையுமென நம்புகிறேன்.

இந்த இடத்தில் எழுத்தாளர் என்.சரவணன் அண்ணான்ட அறிந்தவர்களும் அறியாதவைகளும் நூலை பற்றியும் பகிர்வது பொருத்தமாக அமையும். அந்த புத்தகத்தில் பல இடங்கள் குறிப்புகள் நமக்கு தெரிந்தவை தான். நாம் அவற்றை வெளிப்புறத்திலேயே பார்த்துள்ளோம். எனினும் சரவணன் அண்ணா அவற்றின் உள்ளார்ந்த பின்னணிகளை எடுத்துரைத்திருப்பார். அதனை வாசிப்பதனூடாக நமக்கு



அவற்றை பற்றி மேலும் தேட வேண்டும் எனும் ஆவல் ஏற்படும். அந்த புத்தகத்தின் வெற்றியாகவும் எழுத்தாளர் சரவணன் அண்ணா அதனையே நோக்குகின்றார். உதாரணத்துக்கு ஒன்றை சொல்வதாயின் கொழும்புக்கு செல்பவர்களுக்கு, குறிப்பாக மொறட்டுவ பக்கம் படிக்க போற நம்மாளுகளுக்கு மவுன்ட் லெவினியா (Mount Lavinia) என்ற இடத்தை தெரிஞ்சிருக்கும். அதன் பின்னாலுள்ள பிரித்தானிய ஆளுநருக்கும் இலங்கையின் தாழ்த்தப்பட்ட நடன பெண்ணுக்கும் ஏற்பட்ட காதலையும் அதுசார் பிரித்தானிய சீர்திருத்தங்களையும் அந்நூலில் சரவணன் அண்ணா தெரிவித்துள்ளார். இது மவுன்ட் லெவினியா சார்ந்த தேடலுக்கு வழிவகுக்கிறது.

இவ்அனுபவங்களினை பின் தொடர்ந்தே முதுகலைமானி கற்கைக்கான எனது இந்திய பயணத்தின் அனுபவங்களை பதிவு செய்யும் “என் கால்கள் வழியே...” எனும் தொடரையும் எழுதுகிறேன். இதில் என் அனுபவங்களின் குறிப்புகள் வாசகர்களுக்கான தேடலுக்கான திறவுகோலாக அமைய வேண்டும் எனும் எதிர்பார்க்கையுடனே எழுதுகிறேன்.

சரி தொடர்ந்து டெல்லியின் ஆரம்ப நாட்களின் நினைவுகளில் டெல்லிக்கு பழக்கப்படுதலை தொடர்ந்து பார்ப்போம்....

தொடரும்......

கொக்கோ கோலாவின் கதை

கொக்கோ கோலா மென் பானத்தை கண்டு பிடித்தவர் ஜான் பெம்பெர்டைன் என்ற அமெரிக்கர். ஜான் பெம்பெர்டைன் ”மார்பைன்“ என்ற கஞ்சாவைப் போன்ற ஒரு வகை போதைப் பொருளுக்கு அடிமையாக இருந்தார். அப்பழக்கத்தினின்றும் மீள பிரஞ்ச் வைன் கொக்கோ என்ற மாற்று பானத்தை உற்பத்தி செய்து அதற்கு காப்புரிமையும் பெற்று சந்தைப் படுத்தி வியாபாரம் செய்தார். ஆனால் அந்த பானத்துக்கு அமெரிக்காவின் பல மாகாணங்கள் தடை விதித்தன. எனவே அவர் கார்பன் பாய்ச்சப்பட்ட நீரில் (carbonated water) தயாரிக்கப்பட்ட கொக்கோ கோலா என்ற மென் பானத்தை (Soft Drink) தயாரித்து அதற்கு 1886ம் ஆண்டு மே 8ம் நாள் காப்புரிமை பெற்றார். அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் கோக்கோ கோலாவின் தலைமை அலுவலகம் உள்ளது. இங்குள்ள ஒரு பாதுகாப்பு பெட்டகத்தில் உச்சகட்ட பாதுகாப்புடன் 130 ஆண்டுகால பழமை வாய்ந்த கோக்கோ கோலாவின் தயாரிப்பு ரகசியம் வைக்கப்பட்டுள்ளது.

விற்பனையில் உலகில் முதலிடத்தில் இருக்கும் இந்த கோக்கோ கோலா பானத்துக்கு உலகம் முழுவதுமே கடுமையான எதிர்ப்பு நிலவி வருகிறது. உடல் நலத்துக்கு மிகவும் கெடுதி விளைவிக்கக் கூடியது என்று பல நாடுகளின் தன்னார்வ சுகாதார குழுக்கள் எச்சரிக்கின்றன. இந்த பானத்தின் தயாரிப்பு நிறுவனங்கள் ஏராளமான நீரை விரயம் செய்வதான புகாரும் உள்ளது.

ABAYAM

அபயம்

அபயம் இரகசியம் பேணும்

இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

071 07 12345

மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)

தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

மரம் நாட்டும் முன்மாதிரியான மாணவர்கள்

பரீட்சை முடிந்ததை மை ஊற்றி கொண்டாடும் மாணவர்கள் மத்தியில் மரம் நட்ட கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலய மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

கிளி.⁚. கோணாவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களினால் பரீட்சை முடிவடைந்த பின் பாடசாலை சூழலை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்திய பின் தமது ஞாபகார்த்தமாக மரக்கன்றுகளும் மாணவர்களினால் பாடசாலை வளாகத்தில் நாட்டப்பட்டன. இந்த செயற்பாடு வரவேற்கத்தக்கது. ஏனைய பாடசாலை மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ள இச்செயற்பாடு வரவேற்கத்தக்கது.

எஸ்.எஸ்.நுஜன்

ஆரம்பமாகிறது அடுத்த கிரிக்கெட் திருவிழா

2024க்கான ஆடவர் ரி20 உலகக் கிண்ணம் உத்தியோகபூர்வமாக யூன் முதலாம் திகதி (உள்ளூர் நேரம் பின்னிரவு 7.30 மணிக்கு) ருளுயு இல் ஆரம்பமாகிறது. முதல் போட்டியில் தொடரை இணைந்து நடாத்தும் அமெரிக்காவும் கனடாவும் மோதுகின்றன. சர்வதேச கிரிக்கெட்டின் பழம்பெரும் வைரி - கனடா மற்றும் அமெரிக்கா. ஆசஷ் தொடருக்கு முன்னரே, இந்த இரு அணிகளுக்கும் இடையே முதலாவது சர்வதேச கிரிக்கெட் போட்டி 1844ம் ஆண்டு நியூயார்க் நகரத்தில் நடந்தது. இந்த 3-நாள் போட்டியில் கனடா 23 ஓட்டங்களால் வென்றது. இந்த ஆண்டுக்கான போட்டி டல்லாஸ ில் கிராண்ட் ப்ரேரி ஸ்டேடியத்தில் நடைபெறும், இது முன்னாள் பேஸ்பால் பூங்காவாகும், இது 2023 ஆம் ஆண்டு தொடக்க மேஜர் லீக் கிரிக்கெட் தொடருக்காக, கிரிக்கெட் மைதானமாக மாற்றப்பட்டது.

ரி20 உலகக் கிண்ண தொடரை, மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்கா இணைந்து நடத்துகின்றன. பெரிய ஐசிசி போட்டித் தொடரை, அமெரிக்கா நடத்துவது இதுவே முதல் முறை. மேற்கிந்தியத் தீவுகள், இதற்கு முன் இரண்டு ஆடவர் உலகக் கிண்ணத் தொடர்களை நடத்தியிருக்கின்றன - 2007 இல் ஒரு சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ணம் மற்றும் 2010 இல் ஒரு T20 உலகக் கிண்ணம். ஆடவர் ஒருநாள் சர்வதேச உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியாவும் ரி20 உலகக் கிண்ணத்தை இங்கிலாந்தும் வென்றிந்தன. இரண்டு மகளீர் T20 உலகக் கிண்ணங்களும் கரீபியனில் நடைபெற்றுள்ளன.

2024 ஆடவர் T20 உலகக் கிண்ண தொடர் வரலாற்றில் மிகப்பெரியதாக இருக்கும், 20 அணிகள் ஒன்பது நகரங்களில் 55 போட்டிகளில் விளையாடுகின்றன. ரி20 உலகக்

கிண்ணத்தில் அமெரிக்கா போட்டிகளை நடத்துவது இதுவே முதல் முறையாகும், 16 முதல்-சுற்று ஆட்டங்கள் நசாவ் கவுண்டி சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் (நியூயார்க்), கிராண்ட் ப்ரேரி கிரிக்கெட் ஸ்டேடியம் (டல்லாஸ்) மற்றும் ப்ரோவர்ட் கவுண்டி ஸ்டேடியம் (லாடர்ஹில்) ஆகியவற்றில் நடைபெறவுள்ளது. புளோரிடாவில் உள்ள லாடர்ஹில், 2010 ஆம் ஆண்டு முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்துகிறது, கடந்த ஆண்டு ஆகஸ்டில் மேற்கிந்திய தீவுகள் இரண்டு T20 போட்டிகளை இந்தியாவிற்கெதிராக இங்கு நடத்தியுள்ளது. டல்லாஸில் உள்ள கிராண்ட் ப்ரேரி ஸ்டேடியம் மேஜர் லீக் கிரிக்கெட்டுக்காக கட்டப்பட்டது மற்றும் 2023 ஆம் ஆண்டு ஆரம்ப தொடரில் 12 போட்டிகளை நடத்தியுள்ளது. நியூயார்க்கில் ஒரு புதிய சர்வதேச கிரிக்கெட் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உலகக் கிண்ண தொடருக்காக, 34,000 இருக்கைகள் கொண்ட ஸ்டேடியம் மன்ஹாட்டன் நகரத்திற்கு கிழக்கே 50 கிமீ தொலைவில் கட்டப்பட்டுள்ளது. தொடரின் முதல் சுற்றில், ஜூன் 9 (உள்ளூர் நேரம்) இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் உட்பட, எட்டு போட்டிகள் இந்த புதிய மைதானத்தில் நடைபெறும். இம் மைதானத்திற்கான ஆடுகளங்களை டாமியன் ஹக் மற்றும் அவரது அடிலெய்டு ஓவல் மைதான ஊழியர்கள் குழு தயாரித்து கொடுக்கிறது.

கரீபியனில் ஆறு நாடுகள் (பார்படாஸ், கயானா, ஆன்டிகுவா மற்றும் பார்புடா, டிரினிடாட் மற்றும் டொபாகோ, செயின்ட் லூசியா மற்றும் செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ்) சேர்ந்து பிரையன் லாரா ஸ்டேடியம், டிரினிடாட் மற்றும் பிராவிடன்ஸ் ஸ்டேடியம், கயானாவில் அரையிறுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஜூன் 29 அன்று பார்படாஸில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் இறுதிப் போட்டி நடைபெறும். கிங்ஸ்டனில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சபீனா பார்க் தொடரின் போது போட்டிகள் எதையும் நடத்தாது குறிப்பிடத்தக்கது.

2024 ரி20 உலகக் கிண்ணத்தை வென்று சாதனை படைக்க 20 நாடுகள் போட்டியிடயுள்ளன. 2022 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட தொடரில் 16 அணிகள் பங்கேற்றன. தொடர் நடாத்தும் அணிகளான மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவைத் தவிர, 2022 தொடரில் சிறந்த இடத்தைப் பிடித்த எட்டு அணிகளும் நேரடியாக தகுதியைப் பெற்றன - இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து. ஆப்கானிஸ்தான் மற்றும் வங்காளதேசம் ஆடவர் ரி20 அணி தரவரிசை மூலம் நேரடியாக தகுதி பெற்றன. அயர்லாந்து மற்றும் ஸ்காட்லாந்து ஐரோப்பிய தகுதிச் சுற்று மூலமும் நேபாளம் மற்றும் ஓமன் ஆசிய தகுதிச் சுற்று மூலமும் முன்னேறியது, அதே நேரத்தில் கனடா அமெரிக்கா தகுதிச் சுற்றில் வென்றது. நமீபியா மற்றும் உகாண்டா ஆகியவை ஆப்பிரிக்காவிலிருந்து தகுதி பெற்ற இரண்டு அணிகளாகும். கிழக்கு ஆசிய-பசிபிக் தகுதி சுற்று போட்டியில் பப்புவா நியூ கினியா வெற்றி பெற்றது. கனடாவும் உகாண்டாவும் முதன்முறையாக ஆடவர் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது, அதே சமயம் அமெரிக்காவும் தங்கள் முதல் வ20 உலகக் கிண்ணத் தொடரில் போட்டியிடுகிறது.

தொடரின் வரலாற்றில் மிகப்பெரிய T20 உலகக் கிண்ணம், மீண்டும் மூன்று நிலைகளைக் கொண்டிருக்கும் தொடராக அரங்கேறவுள்ளது - ஒரு ஆரம்பக் குழு நிலை அதைத் தொடர்ந்து சூப்பர் எட்டு மற்றும் இறுதிப் போட்டிகள். போட்டியின் ரவுண்ட்-ராபின் முறையிலான முதல்-சுற்றுக்காக, 20 அணிகளும் ஐந்து அணிகள் கொண்ட நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு நாடும் தங்கள் மற்ற நான்கு குழு அணிகளுடன் விளையாடிய பிறகு குழுக்களில் முதல் இரண்டு இடம் பெறும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும். அணிகளின் ஒரு வெற்றிக்கு இரண்டு புள்ளிகளும், முடிவு இல்லாததற்கு ஒரு புள்ளியும் கிடைக்கும். சமநிலையானால், சூப்பர் ஓவர் முறை மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவார்.. குழு A இன் அனைத்து போட்டிகளும், குழு D

Super Eight Groups

Group 1	Group 2
A1	A2
B2	B1
C1	C2
D2	D1

இன் முதல் ஆறு போட்டிகளும் அமெரிக்காவில் நடைபெறும்.

குழு நிலை முடிந்ததும், நான்கு குழுக்களில் இருந்து முதல் இரண்டு அணிகள் போட்டியின் சூப்பர் எட்டு நிலைக்குச் செல்லும். முதல் சுற்றில் தங்கள் குழுக்களில் முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பிடித்த அணிகள் சூப்பர் எட்டு நிலைக்குத் தகுதி பெற்றால், குழு அட்டவணையில் தங்கள் இறுதி நிலை கருத்தில் கொள்ளப்படாமல், அடுத்த சுற்றில் அதே தரவரிசையை தக்க வைத்துக் கொள்ளும். உதாரணமாக குழு B இல் இங்கிலாந்து முதலிடத்திலும், ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும் தரப்பட்டுள்ளன, அதாவது ஆஸ்திரேலியா இரண்டாவது சுற்றில் குழு 1 க்கு B2 ஆக அட்டவணையில் அவர்களின் நிலையைப் கருத்தில் கொள்ளாமல் செல்லும். தரவரிசை பெறாத அணி குழுவிலிருந்து முன்னேறினால், அவர்கள் வெளியேற்றிய அணியின் தரவரிசையை அவர்கள் எடுப்பார்கள். இரண்டு தரப்படுத்தப்படாத அணிகள் தகுதி பெற்றால், அது குழு நிலை அட்டவணையின் படி தெரிவு செய்யப்படும். அனைத்து சூப்பர் எட்டு போட்டிகளும் கரீபியனில் மட்டும் நடைபெறும்.

ஜூன் 26 மற்றும் 27 ஆம் தேதிகளில் கயானா மற்றும் டிரினிடாட் மற்றும் டொபாகோவில் நடைபெறும் அரையிறுதிக்கு, சூப்பர் எட்டின் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரு இடங்களை பெறும் அணிகள் முன்னேறும். இறுதிப் போட்டி ஜூன் 29 சனிக்கிழமை பார்படாஸில் நடைபெறவுள்ளது.

பார்படாஸில் ஜூன் 29 அன்று திட்டமிடப்பட்ட இறுதிப் போட்டி, கனமழை அல்லது வேறு ஏதேனும் குறுக்கீடு ஏற்பட்டால், அடுத்த நாள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டு அரையிறுதிகளில் (ஜூன் 26 டிரினிடாட்டில் மற்றும் ஜூன் 27 கயானாவில்), டிரினிடாட்டில் நடைபெறும் முதல் அரையிறுதிக்கு மட்டுமே மறுநாள் ஒதுக்கப்படுள்ளது. ஏனென்றால், கயானாவில் நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியானது ஒரு நாள் பின்னுக்குத் தள்ளப்பட்டால், அடுத்த நாள், வேறு ஒரு தீவில் மற்றும் சில மணி நேரங்களுக்குள் வெற்றியாளர் இறுதிப் போட்டியை விளையாட வேண்டும். எனவே அதற்குப் பதிலாக, இரண்டாவது அரையிறுதியில் (உள்ளூர் நேரப்படி காலை 10:30 மணிக்குத் தொடங்கும்) தேவையான

ஓவர்களைப் பெறுவதற்கு ஆட்டத்தை நான்கு மணி நேரம் வரை நீட்டிக்க முடியும். அரையிறுதி போட்டி முடியாவிட்டால், சூப்பர் எட்டு நிலையிலிருந்து அதிக புள்ளி பெற்று முன்னிலையில் உள்ள அணி முன்னேறும்.

ஒன்பதாவது ஆடவர் ரி20 உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றில் கடமையாற்ற 26 போட்டி அதிகாரிகள் (20 நடுவர் - umpires மற்றும் ஆறு போட்டி நடுவர் - match referees) கொண்ட குழுவை ஐசிசி அறிவித்துள்ளது. பின்னர் அவர்களில் இருந்து சூப்பர் எட்டு நிலை, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கான நடுவர்கள் மற்றும் போட்டி நடுவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

புகழ்பெற்ற ஒளிபரப்பாளர்களான ரவி சாஸ்திரி, நாசர் ஹுசைன், இயன் ஸ்மித், ஜோன்ஸ், ஹர்ஷா போக்லே மற்றும் இயன் பிஷப் ஆகியோர் 40க்கும் மேற்பட்ட வர்ணனையாளர்களின் குழுவை 29 நாள் போட்டிகள் கொண்ட தொடரில் வழிநடத்துவார்கள்.

2024 ரி20 உலகக் கோப்பைக்கான பரிசுத் தொகையை ஐசிசி இன்னும் உறுதிப்படுத்தவில்லை. இருப்பினும் ஆஸ்திரேலியா நடத்திய முந்தைய தொடரில் US$5.6 மில்லியன் இருந்து பங்கேற்ற அனைத்து அணிகளும் ஏதாவது ஒரு பங்கை பெற்றுக் கொண்டனர். ஆஊபு இல் 2022 இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதற்காக இங்கிலாந்து 1.6 மில்லியன் அமெரிக்க டாலர்களை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது, அதே நேரத்தில் இறுதிப் போட்டியில் தோற்ற பாகிஸ்தான் அதில் பாதியைப் பெற்றது.